காஞ்சிபுரம் மாவட்டஇணை இயக்குநர் நலப்பபணிகள் அவர்களின் செயல் முறை ஆணைகள்
முன்னிலை : மரு.E.ஜீவா, எம்.பி.பி.எஸ், டி.ஜி.ஓ.,

ந.க.எண்.1574/நி2/2019 நாள்.11.06.2021.

**பணிவரன்முறை ஆணை**

பொருள் நிர்வாகம் - தமிழ்நாடு மருத்துவ சார்நிலைப் பணிகள்- திருமதி.இ.மணிமேகலை, தட்டச்சர் - இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகம், காஞ்சிபுரம் - தற்காலிக பணியினை பணிவரன்முறைப்படுத்தி ஆணை வெளியிடல் -தொடர்பாக.

பார்வை
1. காஞ்சிபுரம், இணை இயக்குநர் நலப்பணிகள் அவர்களின் ந.க.எண்.1574/நி2/2019 நாள் 25.04.2019.
2. உதவி இயக்குநர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களின் கடித எண்.000906/அ3/2020 15.04.2021 நாளிட்ட பள்ளி மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மை தன்மை அறிக்கை.
3. தலைவர், தேர்வுவாரியம், தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை அவர்களின் கடித ஓ.மு.எண்.103836/ட்டி3/2020 நாள்.20.10.2020 தட்டச்சு சான்றிதழ் உண்மை தன்மை அறிக்கை.
4. வட்டாட்சியர், வெம்பாக்கம் அவர்களின் ஓ.மு.ஆ2/2917/2020 நாள்.09.03.2021 நாளிட்ட சாதிச்சான்றிதழ் உண்மைத் தன்மை.
5. காவல் கண்காணிப்பாளர், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் அவர்களின் ந.க.எண்.52/7745/2021, நாள்.04.05.2021 நாளிட்ட ஆளறி அறிக்கை.
6. நிர்வாக அலுவலர், இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களின் 04.06.2021 நாளிட்ட நன்னடத்தை சான்று
7. திரு.மு.முருகன், அலுவலக கண்காணிப்பாளர் (நிர்வாகம்) இணை இயக்குனர் நலப்பணிகள் அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களின் 07.06.2021 நாளிட்ட நன்னடத்தை சான்று.
8. திரு.R.வெங்கடசுப்ரமணியன், அலுவலக கண்காணிப்பாளர் (கணக்கு) இணை இயக்குனர் நலப்பணிகள் அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களின் 04.06.2021 நாளிட்ட நன்னடத்தை சான்று.

---------

ஆணை -

காஞ்சிபுரம் மாவட்டம், இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகத்தில் தட்டச்சராக திருமதி.இ.மணிமேகலை, என்பவர் நிலை 8 ரூ. 19500-62000 என்ற ஊதிய விகிதத்தில் பார்வை (1)ல் காணும் காஞ்சிபுரம் மாவட்ட இணை இயக்குநர் நலப்பணிகள் அவர்களின் பணிநியமன ஆணையின்படி, தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டது.

Scanned with OKEN Scanner

திருமதி.இ.மணிமேகலை, காஞ்சிபுரம் மாவட்டம், இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகத்தில் தட்டச்சராக 02.05.2019 முற்பகல் பணியில் இணைந்து தொடர்ந்து இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

இவர், தனது ஓராண்டு பணியினை 01.05.2020 அன்று பிற்பகல் திருப்திகரமாக முடித்துள்ளார்.

பணி மூப்பு அடிப்படையில் தட்டச்சராகப் பணியமர்த்தப்பட்ட தனியர் பணிவிதிகளில் வரையறுக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் நிரம்பப் பெற்றுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்ட இணை இயக்குனர் நலப்பணிகள் அலுவலகம், நிர்வாக அலுவலர், நிர்வாகப் பிரிவு அலுவலக கண்காணிப்பாளர் மற்றும் கணக்கு பிரிவு அலுவலக கண்காணிப்பாளர் ஆகியோர் தனியரது பணி மற்றும் நடத்தை நன்றாக உள்ளது என சான்றளித்துள்ளனர்.

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணிகளுக்கான பொது விதிகளின் கீழ்வரும் கீழ்வரும் தட்டச்சர் பதவியில் திருமதி.இ.மணிமேகலை, என்பவரின் தற்காலிகப் பணியை அவர் அப்பதவியில் பணியேற்ற நாளான 02.05.2019 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

திருமதி.இ.மணிமேகலை, என்பவரின் தற்காலிக பணி, பணிவரன்முறைப் படுத்தப்பட்ட 02.05.2019 முதல் தொடர்ச்சியான மூன்றாண்டுகளுக்கு உட்பட்டு இரண்டு ஆண்டு காலத்தில் இவர் தகுதிகாண் பருவகாலம் துவங்கப்படுகிறது என இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

11/6/21

இணை இயக்குநர் நலப்பணிகள்,
காஞ்சிபுரம்.

ஈ.செ
11/6/2021

பெறுநர்
திருமதி.இ.மணிமேகலை, தட்டச்சர்,
இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகம்,
அரசு தலைமை மருத்துவமனை வளாகம்,
காஞ்சிபுரம் - 631 501 - உரிய வழியாக

<u>நகல் சமர்ப்பிக்கப்படுகிறது.</u>
இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்,
சென்னை - 6

நகல் - தனியரின் பணிப்திவேடு

உபரி - 1

Scanned with OKEN Scanner